அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 161 /2017
தேதி : 19.12.2017

**கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் காணாமற்போன மீனவர்கள் அனைவரும் மீட்கப்பட வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்.**

சமீபத்தில் தாக்கிய ஒகி புயல் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும்பாதிப்பால், நூற்றுக்கணக்கான மீனவர்கள், மீன்பிடிக்க கடலுக்குச் சென்றிருந்த சமயத்தில் காணாமல் போயிருக்கிறார்கள். இவர்களை மீட்கும் பணி நடந்துக்கொண்டிருந்தாலும், இன்னும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையையும், அவர்களது நிலைமையும் என்னவென்று தெரியவில்லை. இதற்கிடையே கேரள மாநிலம் வேப்பூர் கடற்கரையில் சில சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பது காணாமல்போன மீனவர்களின் குடும்பங்களை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.

காணாமல் போன 551 மீனவர்களின் நிலை குறித்தும், அவர்களை மீட்பது குறித்தும், வரும் 22-ஆம் தேதிக்குள் மத்திய மாநில அரசுகள் பதில் அளிக்கவேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது. காணாமற் போன மீனவர்களின் எண்ணிக்கை குறித்து, அரசுத் தரப்பிலும், மீனவர்கள் தரப்பிலும் வித்தியாசம் இருக்கும் நிலையில், இன்னும் 551 மீனவர்கள் மீட்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

ஏற்கனவே, பலியான மீனவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 20 லட்சம் இழப்பீடு உள்ளிட்ட நிவாரணங்கள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மீட்கப்படாத மீனவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது வேதனையைக் கருத்தில் கொண்டு தகுந்த இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

ஒகி புயலால் குமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளைப் பார்வையிட வந்திருக்கும் பாரத பிரதமர் அவர்கள் தற்போது அறிவித்திருக்கும் 561 கோடி நிவாரணத் தொகைக்கும் கூடுதலாக நிதிஉதவி வழங்கவேண்டும் என்றும் வேண்டுகோள் வைக்கிறேன்.

மீனவ சமூகத்தினரின் பெரும்பான்மையினர் கிருஸ்துவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில், அடுத்த வாரம் வரவிருக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகையை மனநிறைவோடு கொண்டாடும் விதமாக காணாமற்போன மீனவர்கள் அனைவரும் மீட்கப்பட வேண்டும், அதோடு தகுந்த நிவாரணமும் வழங்கப்படவேண்டும் என்பதை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com